**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.59/2025**

**வாக்குமூலம்: வா.சா.1 – சந்திரா**

**10.07.2026 : சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. தாவா சொத்து எந்த ஊரில் இருக்கிறது, அதன் நான்குமால் என்ன என்றால் தாவா சொத்து ஆயக்குடி உள்ளது. தாவா சொத்திற்கு வடக்கு பிரதிவாதியும், கிழக்கு நானும், தெற்கு ஈஸ்வரியும், மேற்கு மகுடீஸ்வரன் என்பவரும் குடியிருந்து வருகிறார்கள். நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. தாவா சொத்தின் முன்பாத்தியஸ்தர்கள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் முன்பாத்தியஸ்தர் பெரியண்ணன் செட்டியார் என்றாலும், அவருக்கு 2 மகன்கள் ராசுசெட்டியார் என்ற ஆறுமுகசெட்டியார் மற்றும் பழனியப்ப செட்டியார் ஆகியோர் உள்ளனர் என்றால் அதுப் பற்றி தெரியாது. ராசுசெட்டியார் என்ற ஆறுமுகசெட்டியார் மற்றும் பழனியப்ப செட்டியார் ஆகியோர் கடந்த 25.10.1945 ஆம் தேதி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி ராசுசெட்டியாருடைய வகையறா தாவாச் சொத்திற்கு வடக்குப் பகுதியை 1 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான்.

2. தெற்குப் பகுதியை பிச்சைமுத்து செட்டியார் அவர்களிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். பிச்சைமுத்து செட்டியார் என்ற ஒருவர் இல்லை என்றாலும், அவரிடமிருந்து நான் கிரையம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதற்கு ஆதரவாக பத்திரம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை எவ்வாறு கிரையம் பெற்றோம் என்றால் எனது மாமியார் மீனாட்சி அவர்கள் தான் கிரையம் பெற்றார் ரூ.30,000/-ம் கொடுத்துள்ளார். கிரையப் பத்திரம் ஏதும் பதிவு செய்யவில்லை. சுமார் 50 வருடங்களாக நாங்கள் அங்கு தான் குடியிருந்து வருகின்றோம். எனது மாமியார் வாய்மொழியாகத் தான் நாங்கள் குடியிருக்கும் தெற்கு பக்க வீட்டை கிரையம் பெற்றுள்ளார். எழுத்து மூலமாக கிரையம் பெறவில்லை. எனது மாமியார் கிரையம் பெற்றதாக எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3. நான் தாவா சொத்திற்கான சொத்து வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். எத்தனை வருடங்களுக்கு முன்பு இருந்த சொத்து வரி ரசீதுகள் என்றால் சுமார் 50 வருடங்களுக்கான சொத்து வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். நான் 50 வருடங்களுக்கான சொத்து வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ராசுசெட்டியார் வகையறா பிரதிவாதிக்கு 2011 ஆம் ஆண்டு கிரையம் கொடுத்த பிறகு தான் எங்கள் பெயரில் சொத்து வரி செலுத்தி வருகின்றோம் என்றால் சரியல்ல. சொத்து வரி எனது கணவர் பெயரில் தான் செலுத்தி வருகின்றோம். எனது மாமியார் பெயரில் செலுத்தவில்லை. பிச்சையப்ப செட்டியாரும், தந்தை பெயரும், அவருடைய பாட்டனார் பெயரும் தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் வாய்க்கராலாக கிரையம் பெற்ற தாவா

சொத்திற்கு தெற்கில் உள்ள சொத்திற்கு 50 வருடங்களாக வரிசெலுத்துவதாக சொல்லியுள்ளேன்.

4. அதற்கு முன்னர் பிச்சையப்ப செட்டியார் பெயரில் வரி செலுத்தப்பட்டு வந்ததா என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நான் சொல்லும் பிச்சையப்ப செட்டியார் அவரது உண்மையான பெயர் பெரியண்ணன் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நூறு ரூபாய்க்கு மேல் ஒரு சொத்தை கிரையம் பெற்றால் அந்த சொத்தைப் பொறுத்து கிரையம் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதால் வாய்மொழியாக நாங்கள் கிரையம் பெற்றது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. திருச்சியில் இருப்பதாக கூறும் பிச்சையப்ப செட்டியார் அவர்களின் வாரிசுகள் யார் என்ற விபரம் தெரியாது. எங்கள் சொத்தை வாய்க்கராலாக எனது மாமியார் கிரையம் பெற்ற போது சாட்சிகள் இருந்தார்களா என்றால் இல்லை. வாய்க்கராலாக கிரையம் பெற்றதாக வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த வருடம் எங்கள் சொத்தை வாய்க்கராலாக எனது மாமியார் கிரையம் பெற்றுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் அவர் இறந்து சுமார் 15 வருடங்கள் ஆகும். எனது கணவர் இறப்பதற்கு முன்பே வரி ரசீது செலுத்தி வருகின்றோம். பிரதிவாதிகள் அனுபவித்து வரும் வடபுறச் சொத்தை எனது கணவர் ராசு கிரையம் கேட்டார் என்றால் அந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

**(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.05 14:05:54 +0530

District Munsif,
Palani.